52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	2,01,43	–	–
54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	1,00,02	9,49,46	–
பெருமொத்தம்	1,597,81,73	3,665,36,69	3,491,12,65

6. அரசினர் தீர்மானம்

திரு. டி.ஆர்.பி. ராஜா மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக 10 சட்டமன்ற நாட்களுக்கு அவை நடவடிக்கைகளிலிருந்து அவரை நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)–ன்கீழ் இன்றே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

Actual ஆக உரிமைக் குழுவிற்கு இந்த matter refer செய்யப்பட்டது. உரிமைக் குழுவில் உங்கள் கட்சி சார்பாக திரு. கம்பம் இராமகிருஷ்ணன் உறுப்பினராக உள்ளார். அவர்,

அவருடைய கருத்தைக் குழுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார். இதை இப்பேரவையில் விவாதிக்கத் தேவையில்லை. (குறுக்கீடுகள்) Please sit down. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் சேர்த்துத்தான் அவை உரிமைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) குழுவில், உங்கள் கட்சியின் சார்பாக இருக்கும் உறுப்பினர், குழுவில் represent செய்திருக்கிறார். இங்கே, இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மேற்படி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)–ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

இன்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், இன்றிலிருந்து இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலும், அடுத்த சட்டமன்றக் கூட்டத்திலும் தொடர்ந்து 10 நாட்கள் வரை அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறார். இக்காலத்தில் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்பட்டுள்ள எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற முடியாது. (குறுக்கீடுகள்)